# விசாரணைக் கமிஷன்

சா. கந்தசாமி



# விசாரணைக் கமிஷன்

(சாகித்ய அகாதமி பரிசுபெற்ற நாவல்)

சா. கந்தசாமி

அகரம்
சரவணா காம்ப்ளெக்ஸ்
15 B-1 வெள்ளப்பண்டாரத் தெரு
கும்பகோணம் 612 001.

■

நிரபராதிகள் கொல்லப்படுவது தடுக்க முடியாத விபத்தாகவே நடந்து வருகிறது. அன்று கோவலன். இன்றும் பலர் அவன் வரிசையில். சிலம்பு விற்கச் சென்ற கணவன் பொற்காசுகளுடன் மாலையில் திரும்பி வருவான். இருள்படர்ந்த தன் வாழ்க்கையில் நாளை ஒளிபரவும் என்று நம்பிக்கையோடு காத்திருந்த கண்ணகிக்கு எப்படி இடிபோன்று அதிர்ச்சியாய், கணவன் குற்றவாளியாக, திருடனாக, கொலையுற்ற செய்தி வந்து கதவைத் தட்டியதோ அதே நிலையில் மாலையில் கண்டக்டராக பணிக்குச் சென்ற கணவன் திரும்பி வருவான், தன்னை டாக்டரிடம் அழைத்துச் செல்வான் என நம்பிக்கையோடு எதிர்நோக்கியிருந்த உடல்நலமற்ற மனைவியிடம் கணவன் அகால மரணமுற்ற செய்தியையும் தகனம் செய்ய வேண்டிய நிலையில் அவனது உடல் மருத்துவமனையில் கிடக்கிறது என்பதையும் சொன்னால் அவள் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? அந்தச் சாவுக்கு எத்தனை விசாரணை வைத்து எவ்வளவு நஷ்ட ஈடு கொடுத்தால்தான் என்ன? ஒரு நிரபராதியின் இழப்பை ஈடு செய்ய இயலுமா? அல்லது நாளையோ மறுநாளோ நடக்க இருக்கும் மற்றொரு நிரபராதியின் மரணத்தைத் தவிர்க்க முடியுமா? பின் எதற்காக இந்த விசாரணை எல்லாம்?

— ஓவியர் கே. எம். ஆதிமூலம்.

■

தங்கராசு என்ற தனிமனிதனின் சாவு, செய்தி என்ற அதன் ஒற்றைப் பரிமாண நிலையிலிருந்து வளர்ந்து அதன் அரசியல் சமூகப் பின்னணிகள் என்ற விஷயங்கள் ஆராயப்படவேண்டிய நிகழ்ச்சியாக இரட்டைப் பரிமாணம் பெற்று, கைதேர்ந்த நாவலாசிரியரான சா. கந்தசாமியின் இலக்கியத் திறமையால் ஒரு முழுமையான கலைப்படைப்பு என்ற மூன்றாவது பரிமாண வளர்ச்சி பெற்று நிற்கிறது. தமிழ்நாட்டு வாசகர்கள் இந்த நாவலின் தீவிரத்தன்மையையும் சமூக வரலாற்றுத்தன்மையையும் கலை முதிர்ச்சியையும் அங்கீகரித்து இது சமீப காலத்திய மிகச்சிறந்த படைப்பு என்ற நான்காவது பரிமாணத்தை இதற்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

—ஐராவதம்